**O.S.No.27/2018** தேதி – 25.07.2025

வா.சா.2.– ராமராஜ்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –

என்னை சாட்சி சொல்வதற்கு வாதிதான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வாக்குமூலம் பற்றி எனக்கு தெரியும். நான் சொல்லித்தான் நிருபண வாக்குமூலத்தை வழக்கறிஞர் தாக்கல் செய்தார். வழக்கு விபரம் எனக்கு வாதி சொல்லித்தான் தெரியும். நான் தாவா புரோநோட்டில் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன். அப்போது நடந்த விசயங்கள் மட்டும்தான் எனக்கு தெரியும். புரோநோட்டு எழுதுவதற்கு முன்பாக வாதி, பிரதிவாதிகளுக்கு நடந்த வழக்கு சம்பந்தமான விசயம் எதுவும் எனக்கு தெரியாது. புரோநோட்டில் சாட்சி கையெழுத்து போட என்னை யார் அழைத்து வந்தார் என்றால் பிரதிவாதிதான் என்னை அழைத்து வந்தார். லட்சுமணன் என்பவரிடம் புரோநோட்டை டைப் செய்து பிரதிவாதி வாங்கி வந்தார். வாதி தாக்கல் செய்த வழக்கில் கடனுறுதி சீட்டு எழுதும் போது யாரும் என்னுடன் இருந்ததாக வழக்குரையிலோ, சாட்சியத்திலோ கூறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புரோநோட்டில் கையெழுத்திடும் போது வாதியும், வாதியின் கணவரும் இருந்தார்கள். பணத்தை யார் எண்ணிக் கொடுத்தது என்றால் யார் எண்ணினார்கள் என்று தெரியாது. வாதி வைத்திருந்தார். பிரதிவாதி வாங்கி அதை எண்ணிப்பார்த்தார். பழைய 500 ரூபாய் நோட்டுகள் என்ன கலர் என்பது குறிப்பாக எனக்கு தெரியாது. வாதி சாட்சியத்தில், பிரதிவாதி புரோநோட்டை கைப்பட எழுதி கொண்டு வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் பிரதிவாதி புரோநோட்டை டைப் செய்துதான் கொண்டுவந்தார். புரோநோட்டை டைப் செய்ததுதான் உண்மை. புரோநோட்டை கைப்பட எழுதி வந்ததாக கூறுவது உண்மையல்ல. புரோநோட்டில் யார் முதலில் கையெழுத்து போட்டார்கள் என்றால் முனியாண்டி போட்டார். 2வது நான் போட்டேன். பிரதிவாதி, வாதியிடம் ஒரு இடம் கிரையம் வாங்கிய விபரம் எனக்கு தெரியும். எப்படி வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. கிரைய பாக்கி தொகை பற்றி எனக்கு தெரியாது. புரோநோட்டில் நான் 2 இடத்தில் கையெழுத்து போட்டேன்.

12.06.2016 ம் தேதி பிரதிவாதி வாதியிடம் வட்டித் தொகை செலுத்துவதற்காக வந்தார். அப்போது நான் வீட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்த போது வட்டி செலுத்த சாட்சி கையெழுத்து போட பிரதிவாதி என்னை அழைத்தார். அப்போது பிரதிவாதி மட்டும்தான் என்னை வந்து அழைத்தார். என்னுடன் சாட்சிக்கு யாரும் இல்லை. ரூ.50 ஆயிரத்தை 500 ரூபாய் கட்டுகளாக எடுத்து வந்தார். புரோநோட்டை பிரதிவாதி வீட்டில் எழுதி கொண்டு வந்தாரா என்றால் பிரதிவாதி, வாதி வீட்டில் வைத்து எழுதினார். வழக்கில் தாக்கல் செய்த புரோநோட்டு காலவதியாகி விட்டது என்றும், அதற்கு உயிர் கொடுக்க வேண்டும் என்பதற்காக நான் வாதியோடு கூட்டு சேர்ந்து பிரதிவாதி ரூ 50 ஆயிரம் வட்டி தொகை கொடுத்ததாக, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் பின்பகுதியில் உள்ள மேற்குறிப்பில் பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றும், என்னுடைய கையெழுத்து இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. புரோநோட்டு எழுதிய தேதிய 21.10.2013 ஆகும். நான் செல்வது போல் வாதியிடம் பிரதிவாதி ரூ.16 லட்சம் பெறவில்லை என்றும், வாதியும் கொடுக்கவில்லை என்றும், நானும் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி தேதியில் வாதியிடம் பிரதிவாதி ஒரு வீடு கிரையம் பெற்றார் என்றும், கிரைய பாக்கித் தொகைக்காக ஒரு புரோநோட்டை எழுதிக் கொடுத்தார் என்றும் ஆனால் அந்த புரோநோட்டின் அடிப்படையில் எந்த தொகையும் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள முதல் பக்கத்தில் 2 வது சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புரோநோட்டின் முன்பக்கத்தில் உள்ள கையெழுத்தும் பின் பக்கத்தில் உள்ள கையெழுத்தும் வித்தியாசம் என்றால் இல்லை. புரோநோட்டில் பின்பக்கத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடைய கையெழுத்தே அல்ல என்றும், முதல் பக்கத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து அன்றைய தினம் நான் போடவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. வாதி கேட்டு கொண்டதற்கிணங்க வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி பிரதிவாதிக்கு எந்தவித தொகையும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எந்த

**வங்கியில் பணம் எடுக்கப்பட்டது என்று சீல் எதுவும் நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை.**

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**